# இலங்கைப் பாராளுமன்றம்
# வெற்றிடங்கள்

## பொருட்கள் ஏற்கும் உதவியாளர்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள வெற்றிடம் நிலவும் பின்வரும் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரித்த விண்ணப்பங்கள் கல்வி / தொழில் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் **"பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே"** எனும் முகவரிக்கு 2025 ஆம் ஆண்டு ஜுன் **20** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**பொருட்கள் ஏற்கும் உதவியாளர் பதவி (வெற்றிடங்களின் எண்ணிக்கை 04)**

1. **சம்பள அளவுத்திட்டம்:-** 2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப்ப தவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ.42,290–9x490/ 10x540/ 6x590 – 55,640 (அனைத்து கொடுப்பனவுகளும் அடங்கலாக ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 80,000/-) ஆகும்.

2. **வயதெல்லை:-** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. **கல்வித் தகைமைகள்:-**
   சிங்களம் அல்லது தமிழ் மொழி ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகள் அடங்கலாக க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

4. **தொழில் தகைமைகள்:-**
   இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் (SLITHM) அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வேறொரு நிறுவனத்தில் 05 மாதங்களுக்கு குறையாத ஆரம்ப சமையல்கலை பாடநெறியை / ஆரம்ப உணவுபான பாடநெறியை பின்பற்றி ஒரு சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   அல்லது

சமையல் அல்லது உணவுபான சேவைகள் பிரிவில் NVQ II ஆம் மட்ட சான்றிதழைப் பெற்றிருத்தல்.

5. **அனுபவம்: -**

மேற்குறித்த (3) மற்றும் (4) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழில் தகைமைகள் என்பவற்றை பூர்த்திசெய்த பின்னர், நட்சத்திர வகுப்பு ஹோட்டலொன்றில்/அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்தில் பொருட்கள் ஏற்கும் உதவியாளராக/சமையலறை உவியாளராக/உணவக உதவியாளராக 06 மாதங்களுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

6. **ஆட்சேர்ப்பு முறை:-** எழுத்து/செயன்முறைப் பரீட்சையொன்று மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேத்துக்கொள்ளப்படும்.

7. **பரீட்சை நடைமுறை:-**

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு செயன்முறைப் பரீட்சைக் குழுவின் மூலமும் மற்றும் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலமும் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

(அ) செயன்முறைப் பரீட்சை

செயன்முறைப் பரீட்சையில், விண்ணப்பதாரர்கள் பின்பற்றியுள்ள பாடநெறிகளுக்கு இணங்க, சமையலறை மற்றும் உணவுபானம் என்ற வகுதிகளின் கீழ் விண்ணப்பதாரர்கள் பரிசீலிக்கப்படுவார்கள். பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100).

(ஆ) நேர்முகப் பரீட்சை

செயன்முறைப் பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையில் கீழ்காணும் தகவுதிறன்களுக்கு இணங்க புள்ளிகள் வழங்கப்படும். அதில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100).

| தொடர் இலக்கம் | விடயப் பிரிவு |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

8. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை தீர்மானங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்படும் என்பதற்கு அமைவாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள நபர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் / தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

**9.** விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் கேட்டுக்கொள்ளப்படும் போது மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்பு சான்றிதழ்

(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்

(இ) தொழில் தகைமை சான்றிதழ்கள்

(ஈ) அனுபவ சான்றிதழ்கள்

**10.** அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்தத் திணைக்கள/நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

**11.** பதவியை பெறும் நோக்கில் ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்கு செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

**12.** விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது என கண்டறியப்பட்டால், அவர் தகைமையற்றவர் என குறிப்பிடப்படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

**13.** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பின்னர் அனுப்பப்படுகின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள/நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத (தற்பொழுது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றுபவர்கள்) அல்லது மாதிரிப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதில் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2025 ஆம் ஆண்டு மே மாதம் **27** ஆம் திகதி